# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.92/2024

### அ.சா. 2 (LW 2)

| பெயர் | திரு. அமல்ராஜ் | தொழில் | |
|---|---|---|---|
| த/ பெயர் | சவரிமுத்து | மதம் | |
| கிராமம் | | வயது | 94 |
| தாலூகா | | தேதி | 16.03.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி பிடி வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது சவரியார்பட்டியில் குடியிருக்கிறேன். அசா.1. எனது மூத்த மகள் ஆவார். இறந்து போன ஆரோக்கியசாமி எனது மருமகன் ஆவார். ஆஜர் எதிரிகள் எனது மருமகனும், பேரன்களும் ஆவார்கள். என் பெரிய மருமகனுக்கும், சின்ன மருமகனுக்கும் நிலம் விற்பனை சம்மந்தமாக ஆளுக்கொரு நபர்களை விற்பனை செய்வதற்காக கூட்டிக் கொண்டு வந்து நிலங்களை காட்டி விற்பனை செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்தார்கள். அப்பொழுது ஒருவர் கூட்டிக் கொண்டு வரும் நிலம் வாங்குபவரை மற்றொருவர் மறுதலிப்பதாக இருந்து வந்ததற்கிடையில் இருவருக்கும் கருத்து வேறுபாடு இருந்து வந்தது. இது சம்மந்தமாக சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் மருமகன்கள் சண்டையிட்டதால் நான் போய் படுத்துக் கொண்டேன். போலிசார் சம்பவம் குறித்து விசாரித்த போது என்னால் பேச முடியவில்லை. தற்போதும் என்னால் பேச முடியவில்லை.

<u>**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது.**</u> **அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலிசார் விசாரணையில் 18.07.2022 அன்று நானும் எனது மகள் அ.சா1. மற்றும் வழக்கில் இறந்து போன ஆரோக்கியசாமியும் ஒத்தையூர் தோட்டத்தில் குடியிருந்து வந்தோம். ஆஜர் எதிரிகள் இறந்து போன ஆரோக்கியசாமி பூர்வீக நிலம் விற்பனை சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு வந்ததாகவும், மேற்படி விற்பனை செய்யப்படவுள்ள நிலத்திற்கான பங்குத் தொகையை ஆஜர் எதிரிகள் கேட்டு வந்ததாகவும், அதை இறந்து போன ஆரோக்கியசாமி மறுத்து வந்ததாகவும் அதனால் கோபம் கொண்ட ஆஜர் எதிரிகள் இறந்து போன ஆரோக்கியசாமியிடம் முன்பகை

கொண்டு இருந்ததாகவும் அந்த முன் பகை காரணமாக ஆஜர் எதிரிகள் அவ்வப்போது இறந்து போன ஆரோக்கியசாமியிடம் பிரச்சனை செய்வதை வழக்கமாக கொண்டிருந்தாகவும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் தெரியாது. சம்பவ நாளான 18.07.2022 அன்று காலை 09.00மணிக்கு 1வது எதிரியான பிரவின் லாரன்ஸ் இறந்து போன ஆரோக்கியசாமியிடம் பங்கு பணம் கேட்டு தகராறு செய்து 1ம் எதிரியானவர் இறந்து போன ஆரோக்கியசாமியின் வீட்டிலிருந்து கறிக்கட்டையை எடுத்து ஆரோக்கியசாமியின் பின்தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், அதனை தடுக்க சென்ற அசா.1ஐயும் மிரட்டி சென்றதாக நான் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது என் வயோதிகத்தின் காரணமாக மறதியாலும் சம்பவ நிகழ்ச்சிகளை நான் நினைவு கூர்ந்து சொல்ல இயலாததன் காரணமாகவும் எதிரிகள் என் உறவினர்கள் என்பதாலும் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.16 21:04:10 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.